உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சஉ.] தாரண-ஞூ கார்த்திகைமீ [பகுதி —க.

Vol. 42. November—December 1944. No. 1.

உள்ளுறை.


பாரிஜாதவீணை:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தாவர்கள் க—ச

பண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசர்வர்கள், நல்லூர் ரு—கo

ஒரு வரவேற்புப்பத்திரம் :— கக

மதிப்புரை:— ... ... ... ... கஉ


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்சேந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், சேந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் | 6 | 0 | 0 |
| | * ஷை இரண்டாம்பாகம் ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| | *திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

---

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-சஉ.] தாரண-ஸு கார்த்திகைமீ [பகுதி-க

Vol. 42. November-December 1944. No. 1.

## பாரிஜாதவீணை

இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்
ஸ்ரீ. சுவாமி. விபுலாநந்தரவர்கள்

செந்தமிழ்த்தொகுதி ருகூ பகுதி கஉ இல் வெளிவந்த "சங்கீத பாரிஜாதம்" என்னும் பொருளுரையிலே, "நூலாசிரியராகிய அஹோபலபண்டிதர் வீணைக்கு மெட்டுவைத்தற்குத் தருகின்ற கணக்கினைத் தனியாகப் பின்பு ஆராய்வாம்" எனக் குறிப்பிட்டாம். அதற்கியைய இதனை எழுதுகின்றாம்.

முதலிலே அஹோபலர் தமது நூலினுள்ளே இப்பொருள்பற்றித் தந்த சூத்திரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பினை ஐந்துகட்டளைக் கலித்துறைச்செய்யுட்களாக எழுதிப் பொருட்டெளிவிற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய குறிப்புக்களையுந் தருவாம்.

(க) ஒலியியல் வீணை நரம்பின் செம்பாலின் உறுதிபெறும்
வலிநிலைச் சட்சம் இருசட்ச மத்தியில் மத்திமமாம்
கலைமலி பஞ்சமம் முப்பாலை மேவக் ககரவிசை
நிலையுஞ் சகர பகர நடுவினில் நேரிழையே.

வீணைநரம்பினை இருபத்துநான்கு சமகூறுசெய்து, மேருவிலே (0) வெற்றிலக்கத்தைவைத்துக் கூறுகளின் கீழெல்லையிலே 1 முதல் 24 வரையுமுள்ள எண்களை அடைவே நிறுத்துமிடத்துச் செம்பாலாகிய 12 இல் தாரஷட்ஜம் நிற்கும். மேருவிலே சமன் ஷட்ஜம், நின்றதாதலின், இரு ஷட்ஜங்களின் நடுவிடமாகிய 6 இல் மத்திமம் நிற்கும். நரம்பினை முக்கூறுசெய்தலினால் எய்துகின்ற 8 இலும் 16 இலும் சமன்பஞ்சமமும் தாரபஞ்சமமும் முறையே நிற்பன. மேருவுக்கும் பஞ்சமத்திற்கும் நடுவிடமாகிய 4 இல் சாதாரண காந்தாரம் நிலைபெறும்.

*

(உ) பூருவ பாகத்தி னிற்கு மிடபம் (பொருந்துகிளை
நீர்மைகோள் தைவதம்) பஞ்சம சட்சத்தி னேர்நடுவாம்
சேரவ் வெளியின்முப் பாலிரு பாலிறு வாகநிற்கும்
ஏரியல் யானை யிசையென நூலோ ரியம்பினரே.

மேலே "ககரவிசை, நிலையுஞ் சகர பகர நடுவினில்" என்றமையின், இங்கு "பூருவபாகம்" என்றது, மேருவிற்கும் 4 இற்கும் இடையே யுள்ள வெளி எனப் பொருள்படும். வடநாட்டார் சுத்தரிஷபம் என வழங்குவது தென்னாட்டுச் சதுசுருதிரிஷபத்தையாம். சதுசுருதி தைவதம் இதற்குச் சம்வாதியாக அமைந்ததாதலின், "கிளை நீர்மை கொள்" எனச் சிறப்பிக்கப்பட்டது. 'தைவதம் பஞ்சமஷட்ஜத்தின் னேர்நடுவாம்' என்றமையின், 8 இற்கும் 12 இற்கும் இடைநின்ற 10 இல் சதுசுருதிதைவதம் நிலைபெற்றதென அறிகின்றாம்.

[வடநாட்டார் இதனைச் சுத்ததைவதம் என வழங்குவர். தென்னாட்டுச் சுத்ததைவதம் அவர்தமது கோமளதைவதமாகும். அவ்வாறே தென்னாட்டுச் சுத்தரிஷபம் வடநாட்டுவழக்கில் கோமளரிஷபம் எனப்படும். அஹோபலர் கரஹரப்பிரியாமேளத்தைச் சுத்தமேளமெனக்கொண்டாராதலின், வடபாலினும் தென்பாலினும் இக்காலத்தார்கொள்ளும் வழக்கில் வேறுபட்டுச் சாதாரண காந்தாரத்தையும் கைசிகிநிஷாதத்தையும் சுத்தசுவரங்களென வைத்து, அந்தரகாந்தாரத்தைத் தீவிரகாந்தாரமெனவும் காகலி நிஷாதத்தைத் தீவிரநிஷாதமெனவும் வழங்கினர். பன்னிரண்டு சுவரஸ்தானங்களையும் ச ர ரி க கி ம மி ப த தி ந நி என வழங்குதல் மலைவு எய்தாது காத்தற்கு வழியாகும்.]

இனி (ரி) ரிஷபம் நின்ற இடத்தினை நிச்சயிப்பாம். (தி) தைவதம் 10 இல் நின்றதாதலின், அதன் இயக்க நரம்பின் நீளம் 24 இல் 10ஐக் கழித்துப்பெறும் 14 கூறு ஆகும். இதன் சம்வாதி 14 இன் மும்மடியிற் பாதியாகிய 21 கூற்றினை இயக்கநரம்பாகப்பெறும். அவ்வாறு பெறுதற்கு (ரி) ரிஷபம் 3 இல் நிற்றல்வேண்டும். யானையிசை -(ந) நிஷாதம். இது பஞ்சம ஷட்ஜவெளியின் முப்பாலினிருபாலிறுவாகநின்றதென்றமையின், $10\frac{2}{3}$ இல் நின்றதெனத் துணிகின்றாம்.

(௩) எல்லை யிடப வெளியின் முப்பாலி லிரண்டுகோளும்
முல்லை நிலத்தியல் கோமள ஆன்கன்று மோய்குழலே
தோல்லியல் மேரு தகர விசைநடுத் தோன்றிநிற்கும்
நல்லியற் றீவிர காந்தார மென்ன நவின்றனரே.

எல்லையென்றது மேருவிணை. (ர) "கோமளரிஷபம் முப்பாலில் இரண்டு கொளும்" என்றமையின், மேருவிற்கும் (ரி) ரிஷபம் நிற்கும் 3 இற்கும் இடையே 2 இல் நிற்கும் என்பது தெளிவாகின்றது. (கி) தீவிரகாந்தாரமானது மேருவிற்கும் (தி) தைவதம் நிற்கும் 10 இற்கும் நடுவிடமாகிய 5 இல் நிற்கும்.

(சு) கூர்ந்த தகர சகர வெளியைமுக் கூறுசெய்யச்
சேர்ந்த முதலிரு கூற்றிடை மத்தீ விரதமமே
நேர்ந்த பகர சகரமுப் பான்முதற் பாலிறுதி
தேர்ந்துணர் கோமள தைவத மாமெனச் செப்புவரே.

(கி) தீவிரகாந்தாரத்திற்கும் தாரஷட்ஜத்திற்கும் இடைவெளி 7 கூறுகும். இதன் "முதலிருகூற்றிடை" என்றமையின், முக்கூற்றின் முதற்கூற்றிறுதியில், அஃதாவது $5 + 2\frac{1}{3} = 7\frac{1}{3}$ இல், (மி) வராளிமத்திமம் நிற்கும். பஞ்சமத்திற்கும் தாரஷட்ஜத்திற்கும் இடையே யமைந்த வெளியினை மூன்றுகூறுசெய்து, முதற்கூற்றின் ஈற்றில், அஃதாவது $9\frac{1}{3}$ இல் (த) கோமளதைவதத்தை நிறுத்தல்வேண்டும்.

(ரு) தகர சகர வெளியின்முப் பாலிரு பாலிறுதி
பகரு நிஷாதத்தின் தீவிர வோசை படருமென்பர்
நிகழ மிசைத்திறன் நல்கிய வீணை நிலையுணர்ந்து
புகலும் அகோபல பண்டிதன் கூறும் பொருளிவையே.

(நி) தீவிர நிஷாதம் "தகர சகர வெளியின் முப்பால் இருபால் இறுதிபடரும்" என்றமையால் $11\frac{1}{3}$ இல் நிற்குமென்பது தெளிவாகின்றது.

இவையனைத்தினுக்கும் பொருந்திய இசைநரம்புநீளங்களைத் தொகுத்துரைப்பாம்.

ச 24, ர 22, ரி 21, க 20, கி 19, ம 18, மி $16\frac{2}{3}$, ப 16, த $14\frac{2}{3}$, தி 14, ந $13\frac{1}{3}$, நி $12\frac{2}{3}$, ச 12.

அங்ஙனமாதலின் நரம்புநீள விகிதங்கள்

$\frac{24}{24}$, $\frac{22}{24}$, $\frac{21}{24}$, $\frac{20}{24}$, $\frac{19}{24}$, $\frac{18}{24}$, $\frac{16\frac{2}{3}}{24}$, $\frac{16}{24}$, $\frac{14\frac{2}{3}}{24}$, $\frac{14}{24}$, $\frac{13\frac{1}{3}}{24}$, $\frac{12\frac{2}{3}}{24}$, $\frac{12}{24}$ என நின்றன.

எண்களைச் சுருக்குமிடத்து, இவை முறையே $\frac{11}{12}$, $\frac{7}{8}$, $\frac{5}{6}$, $\frac{19}{24}$, $\frac{3}{4}$, $\frac{25}{36}$, $\frac{2}{3}$, $\frac{11}{18}$, $\frac{7}{12}$, $\frac{5}{9}$, $\frac{19}{36}$, $\frac{1}{2}$ என நிற்பன.

மேற்குறித்த இடங்களிலே அமைந்துநின்ற மெட்டுக்களில் ச, ர, ரி, க, கி, ம, மி, ப, த, தி, ந, நி, ச என்னும் சுவரங்கள் தோன்றுவன.

நரம்புநீளவிகிதங்களின் தலைகீழெண்கள் அசைவெண்விகிதங்களைத் தருவனவாதலின், அவை 1, $\frac{12}{11}$, $\frac{8}{7}$, $\frac{6}{5}$, $\frac{24}{19}$, $\frac{4}{3}$, $\frac{36}{25}$, $\frac{3}{2}$, $\frac{18}{11}$, $\frac{12}{7}$, $\frac{9}{5}$, $\frac{36}{19}$, 2 என நிற்பன. இவைதமக்குரிய சதவிலக்கங்கள். 0, 151, 231, 316, 405, 498, 632, 702, 853, 933, 1018, 1107, 1200 என வருவன. அங்ஙனமாதலின் இடைவிகிதங்களின் சதவிலக்கங்கள்,

151, 80, 85, 89, 93, 134, 70
151, 80, 85, 89, 93, என வருதலை நோக்குக.

அஹோபலர் சுத்தமேளமெனக்கொண்ட கரஹரப்பிரியாவுக்கு உரிய சுவரங்கள் அசைவெண்விகிதங்கள் சதவிலக்கங்கள் இடைவிகிதங்களின் சதவிலக்கங்கள் என்பவற்றைத் தொகுத்து அட்டவணைப்படுத்துவாம்.

பாரிஜாதவீணை—கரஹரப்பிரியா மேளம்.

| சுவரங்கள் | ச | ரி | க | ம | ப | தி | ந | ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| அசைவெண்விகிதங்கள் ... | 1 | $\frac{8}{7}$ | $\frac{6}{5}$ | $\frac{4}{3}$ | $\frac{3}{2}$ | $\frac{12}{7}$ | $\frac{9}{5}$ | 2 |
| சதவிலக்கங்கள் ... | 0 | 231 | 316 | 498 | 702 | 933 | 1018 | 1200 |
| இடைவிகிதங்களின் சதவிலக்கங்கள். } ... | | 231 | 85 | 182 | 204 | 231 | 85 | 182 |

மேலே காட்டிய ஏழுசுவரங்களும் சுத்தசுவரமெனவும், எஞ்சிநின்ற ர, கி, மி, த, நி என்னும் ஐந்தும் விகிர்தசுவரமெனவும் வழங்கப்பட்டன. (ரி) ரிஷப (தி) தைவதங்கள் முறையே $\frac{8}{7}$, $\frac{12}{7}$ என்னும் அசைவெண்விகிதங்களைப்பெற்றுநின்றமையால் "ஏழின்பகுதிய" (Septimals) எனப்படுவ. இப்பொழுது வழக்கிலுள்ள (ரி) ரிஷப (தி) தைவதங்களிலும்பார்க்க இவை தனித்தனி 27 சதம் அதிகமாகிநிற்பன.

# பண்டைத்தமிழர்

**சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.**

[செந்தமிழ் சக-ஆம் தொகுதியின் உசுரு-ஆம் பக்கத் தொடர்ச்சி]

## ஊண் உடை நடைகளும் அழகுக்கலைகளும்

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளின் முன்னிருந்த தமிழருடைய சீவியப் பாங்கை நன்றாய் நிச்சயித்தற்கு எகிப்திலேபோல மொஹெஞ்சோதரோவிலாவது ஹரப்பாவிலாவது போதிய சான்றுகள் இல்லை. எகிப்தியர் தங்கள் இறந்தோரின் சமாதிகளிலே அபரிமிதமாய் எழுதிவைத்தவைகளைக்கொண்டும், போட்டுவைத்த பொருள்களைக்கொண்டும் அவர்கள் சரித்திரம் மிகவும் விவரமாய் அறியக்கூடியதாயிருக்கிறது. அன்னோரைப்போல நம் தமிழர் இறந்தோரை அவ்வளவு போற்றியதாகக் காணவில்லை. இவர்கள் விட்டுப் போன உருவெழுத்துமுத்திரைகளில் ஹிறஸ்சுவாமியார் வாசித்த அளவில் நாம் காணக்கிடப்பதும் மிகச் சொற்பமே. ஆயினும், பிற புதைபொருள்களிலிருந்து பொதுமுறையிற் சில விசேஷங்கள் ஊகித்தறியத்தக்கனவாயுள்ளன.

பண்டைக்கால இந்தியாவிலே வேறு தேசங்களிற்போலப் பெரிய தனவந்தரும் பரம ஏழைகளும் என்ற மிக அகன்ற பாகுபாடில்லாமல் எல்லோரும் ஏறக்குறையச் சமமான சுயாதீனமுள்ளவர்களாய் வாழ்ந்தார்கள் என்று சொல்வதற்கு மொஹெஞ்சோதரோ பட்டணத்தின் வீடுவாசல்கள் இடந்தருகின்றன. சாதிபேதம் என்ற கட்டுப்பாட்டுக்கு அங்கு இடமில்லை. அந்தப் பட்டணத்தார் கொடுங்கோலரசின்கீழல்ல, நகரசங்கம்போன்ற ஓர் கழகஆட்சியின்கீழ்ச் சீவித்தார்கள் என்னவேண்டும். வெளிநாட்டு வியாபாரமே அப்பட்டணத்தை மேல்நிலைக்குக்கொண்டுவந்ததுபோலும். மொஹெஞ்சோதரோ சிந்துநதியின் முகத்துவாரத்துக்குச் சமீபத்திலும் பெருஞ்சமுத்திரத்துக்குச் சொற்பதூரத்திலும் இருந்தமையால், அது ஹரப்பாவினும் வியாபாரத்துக்கு அதிக வாய்ப்புடையதாயிற்று. முன் பலுச்சிஸ்தானத்தின் வறண்டதரைகளிலிருந்துவந்தவர்களே சிந்துநதிப்பள்ளத்தாக்கினர் எனில், இப் புதுவாசஸ்தலத்தின் செழிப்பும் சௌகரியமும் அவர்களைச் சீக்கிரம் சீர்திருத்தத்திலே மேற்படச்செய்திருக்கும். தங்கள் பழைய இருப்பிடங்களாகிய மெசொப்பொத்தாமியாப் பகுதிப் பட்டணங்களோடு அவர்கள் என்றும் கொண்டிருந்த உறவும் போக்குவரவும் அச்சீர்திருத்தத்தை மேலும் வளர்த்திருக்கும் என்பதில் மயக்கமில்லை.

அச்சீர்திருத்தத்துக்கு அடிப்படையாயிருந்தது சிந்து சமவெளியில் மிக மிகப் பயிரான கோதுமையும் வாற்கோதுமையுமே எனலாம். இன்றைக்கும் லர்க்கணப்பிரிவிலே பயிர்செய்யப்படுகின்றதாகிய நெல்லும் ஒருசிறிது சனங்களின் உணவாயிற்றுப்போலும். கோதுமை முதலிய தானியங்களோடு மாடு பன்றி ஆடு கோழி ஆகியவற்றின் மாமிசமும் சனங்களுடைய தினசரி உணவாயிற்று என்பதை வீடுகளையடுத்த வாய்க்கால்களிலும் தெருக்களிலும் சிதறுண்டு கிடக்கும் எலும்புகளைக்கொண்டு விளங்கிக்கொள்ளலாம். ஒருவகை முதலையும் ஆமையும் அன்றிச் சிந்துநதியிற்பிடித்த மீனும் கரைத்துறைகளிலிருந்துவந்த இறைச்சியும் உண்ணப்பட்டன. பட்டணத்தவர்கள் அயற்காடுகளில் வேட்டையாடி மாமிசம்புசித்தனரெனவும் சித்திரங்களால் வெளியாகின்றது. அழிவுகளுக்குள் அகப்பட்ட பெரிய மான்கொம்புகளும் இதற்குச் சான்று. சுட்ட மண்ணுருவங்களில் நாம் காண்கின்ற வேட்டைநாய்களைப்போன்றவை வேட்டையாளருக்குத் துணைசெய்தனபோலும். மரக்கறிகளையும் பாலுணவையும்பற்றி ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும், அக்காலம் கீரை கிழங்குகள் அறியப்படாதிருந்தன எனல் கூடாது. மக்களிடம் மாடுகளும் ஆடுகளும் மிகுதியாய் இருந்தன. எனவே பாலுணவுகளும் மிக வழங்கியிருக்கும் எனச் சொல்லலாம்.

சித்திரங்களின்மூலமாய் நாம் அறிகின்றபடி, ஆண்பிள்ளைகளுடைய உடை தற்காலத்தமிழர்செய்வதுபோல அரையைச்சுற்றிக்கட்டும் பஞ்சுத் துணியேயாயிற்று. ஒருவகை இரெட்டும் உபயோகப்பட்டதாகத்தோன்றுகிறது. மேற்பதவியிலுள்ளவர்கள் எழுத்துச் சீலையான ஒன்றைச் சால்வை போல இடதுதோண்மேற்போட்டுக்கொண்டதாக ஒரு ஆளுருவத்திலிருந்து தெரிகிறது. தலைமயிரிலே வெவ்வேறு மோடி காணப்படுகிறது. சிலர் மயிரைக் கட்டையாகக் கத்தரித்து மீசையையும் மழித்துக் குறுந்தாடிவிட்டிருந்தார்கள். சிலர் தலைமயிரை வளர்த்துப் பின்னுற் சேர்த்துக் கட்டிக்கொண்டார்கள். பெண்கள் ஒருவிதமான பாவாடை கட்டியிருந்தனர். அரைக்குமேல் உடையின்றியிருப்பதும் உண்டு. சால்வைபோன்ற ஒன்முற் போர்த்துக்கொள்வதுமுண்டு. தலையிற் சட்டிபோன்ற ஒரு அணியிருந்தது. இது மயிர்ப்பின்னலுமாகலாம். நாட்டியப்பெண்கள் இருண்ட நிறமுள்ள ஆதிச்சுதேசிகளேபோலும். அவர்களின் உருவப்பதுமைகள் உடையின்றியிருத்தலால் அன்னோர் நிருவாணிகளாய்த்திரிந்தனர் என்று எண்ண இடமுண்டு.

இக்காலத் தமிழ்ப்பெண்களைப்போலவே அக்காலத்தாரும் பல வகைப்பட்ட பூணாரங்களைப் பூண்டும் மேனியை மினுக்கிச் செயற்கையழகு செய்துகொண்டும்வந்தனர் என்பதற்குப் புதைபொருள்களுட் பல சான்றுகள் உள. உடையைச் சுருக்கிப்பிடிக்கும் பூட்டூசிகள், கொண்டையூசிகள், கண்டமாலைகள், மணிகோத்த ஒட்டியாணங்கள், அறுசரங்கொண்ட கையணிகள், உள்ளே அரக்கிட்ட கைக்காப்புகள், நெற்றிச்சுட்டிகள், காற்காப்புகள், காதணிகள், மோதிரங்கள், பலவகைக் கல் இழைத்த பதக்கங்கள் ஆகிய இவைகள் பொன் வெள்ளி செம்பு வெண்கலம் கொம்பு உயர்தரக்கல் ஆகியவற்றாற் செய்யப்பட்டவை கண்டெடுக்கப்பட்டன. பொன்தகட்டாலான நெற்றிப்பட்டங்களும் இருந்தன. இவ்விதத் தகடுகளைக் கிரேத்தாதீவிலும் குருமார் அணிந்தனர். இவற்றோடு முகம்பார்க்கும் வெண்கல ஆடிகள், கண்ணுக்கு மைதீட்டும் ஊசிகள், தந்தம் முதலியவற்றாலான சீப்புகள் ஆதியனவும் இருந்தன. பெண்கள் கண்ணுக்கு மையன்றி உதடுகளுக்குச் சிவப்பும் தீட்டும்வழக்கம் உடையவர்களாயிருந்ததற்குச் சங்குதரோவில் அத்தாட்சி காணப்பட்டது என்பர். நகைகள் தனித்தனியேயன்றித் தொகையாய் வெள்ளி அல்லது செப்புப்பாத்திரங்களில்வைத்து மூடிச் சுவருக்குள் அல்லது உள்வீட்டுத்தளத்திலே புதைத்திருந்தனவாயும் காணப்பட்டன. தொகையாய்ச் சேமித்த நகைகளுக்கு உடையோர், தாங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் வீடுகளைவிட்டு ஓடவேண்டியிருந்தவர்கள், பின்னொருகாலம் மீண்டுவந்து அவைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணினார்கள் போலும். நகைகளுட் பல மிக நுட்பமான அழகுவாய்ந்தவை. அந்நாளிற் பொற்கொல்லர் பொன்வெள்ளிகளை அறவூதி விதம்விதமான ஆபரணங்களைச் செய்யும்வித்தையை அறிந்திருந்தனர். பவளம் முதலிய விலையுயர்ந்த கற்களைச் சிறுமணிகளாக்கி அவற்றைக் கோப்பதற்குவேண்டிய சிறு துளையை அறுத்துவைத்தமையும் மெச்சத்தக்க ஒரு வித்தையன்றோ!

பெண்கள் அணிந்த வளையல்களுள் பொன் வெள்ளி செம்புகளாற் செய்யப்பட்டவை பணம் பண்டம் உள்ளோருடையவையும், களிமண்ணிற் சுட்டவை கீழ்த்தரமானவர்களுடையவையுமாகலாம். சங்குவளையல்களும் தொகையாய் அகப்பட்டன. இவை சிந்துவெளியார் கோடிக்கரையாரோடு கொண்டிருந்த வியாபாரப்போக்குவரவுக்கு அறிகுறியாகின்றன. கல்வகைகள் சிலவற்றை அன்னோர் தென்னிந்தியாவின் வேறுபாகங்களிலிருந்து

பெற்றிருக்கவேண்டியவர்கள். கரைமார்க்கமாய்மட்டுமல்ல, கடல்மார்க்கமாகவும் அவர்கள் போய்வந்ததற்குச் சுமேரியாப்பகுதிகளில் முன்சொன்னதுபோல, அக்காலம் இந்தியாவிற் செய்த "முத்திரை"கள் ஆதியன கண்டெடுக்கப்பட்டமையும் இதை உறுதிப்படுத்துகின்றது.

வீடுகளிலே பொதுவாக மரக்கட்டில்களும் மரத்தாற்செய்த அல்லது நாணலாற் பின்னிய சிறு முக்காலிகளும் இருந்தனபோலும். இவைகளோடு மேசைபோன்ற பீடங்களும் வழங்கியதாக "முத்திரை"களிற் காணும் சில சித்திரங்களால் அறிகிறோம். உட்காருதற்கு நாணற்புற்பாய்களே அதிகமாக உபயோகிக்கப்பட்டிருக்கும் என்பர். சமையல்செய்யவும் உணவு கொள்ளவும் பானம்பருகவும் மட்கலங்கள் உதவின. செப்புக்கலங்களும் சில (மூடியோடு) காணப்பட்டன. செம்பினாற்செய்யப்பட்ட அவை இன்றைக்கும் செம்பு என்று வழங்குவதை நோக்குக. ஆயினும் சமயவழிபாட்டுக்குரியவைகள் சங்கினாலும் வெண்கல்லாலும் ஆக்கப்பட்டனபோலும். மூக்குள்ளனவும் கைபிடிகொண்டனவுமான கலங்கள் சிலவும், மூடியுள்ள பாத்திரங்கள் கனற்சட்டிகளும் கிடைத்தன. மெசொப்பொத்தாமியாவில் வழங்கியனபோன்ற காணிக்கைப்பீடக்கலங்களும் இருந்தன. இவை இரண்டடிவரையில் திரண்டுயர்ந்து மேற்பரப்பில் அகன்ற வட்டில்போலுள்ளன. சட்டிபானைகளோ அனந்தம். மொஹெஞ்சோதரோவில் குயவர் மிக்குக் குடியிருந்த ஒருபாகமும் உண்டென்பது சிலரது அபிப்பிராயம். சிறுபிள்ளை விளையாட்டுக்காக அரை அங்குல உயரத்தில் வேட்கோவர் செய்திருக்கின்ற மட்கலங்கள் பார்ப்போருக்கு ஆச்சரியத்தை விளைக்கும். குழந்தைகளை மகிழ்விக்கும்பொருட்டு அப்பட்டணத்தார் சேர்த்துவைத்திருந்தபொருள்களும் பல. தந்தத்தால் அல்லது சிப்பி முதலியவற்றாற்செய்த உணவூட்டிகள், மண்மாடுகள், கூடாரவண்டிகள், பந்துமாதிரிக் கிலுக்கிகள், ஊதுகுழல்கள், நாய், குரங்கு, ஒற்றைக்கொம்பன், பறவைகள் முதலியவற்றின் உருவம்போலச்செய்யப்பட்ட சிறு பதுமைகள், தலையசைக்கும் எருதுகள் ஆதியாய்ப் பல விளையாட்டுச் சாமான்கள் எடுக்கப்பட்டன. வண்டி மாடுகளின் உருவங்கள் அக்காலத்தார் போக்குவரவுக்கு உபயோகித்த மாடு வண்டிகளைக் காட்டுகின்றன. இவற்றோடு பலவகைப்பட்ட ஆயுதங்களும் இருந்தன. வேட்கோவரின் உருளைகள், மெருகிடும் கருவிகள், மழிக்குங்கத்திகள், புரிமணைகள், எலிப்பொறிகள், அம்மி குழவிகள், ஏந்திரக்கற்கள், உரல்கள், பலவகைக் கைவிளக்குகள், இடைவாள்கள், அரிவாள்கள், ஈட்டிகள்,

வேல்கள், அம்புமுனைகள், கோடரிகள், வாய்ச்சிகள், உழுகலங்கள், தூண்டில் முட்கள் ஆதியன இருந்தன. அரிவாள்கள் வெளியே வளைந்தவைகளாய்ப் பல்லுள்ளனவாயிருந்தமை வேறு பழங்காலப்பொருள்களுள் இல்லாத ஒரு விசேஷம். இவைகள் சங்கறுக்க உதவின எனத்தோன்றும். தராசு படிகள் சரி அளவுள்ளவைகளாய்க் கல்லில் அழுத்தமாய்ச் செய்தவை ஏறக்குறைய எல்லாவீடுகளிலும் காணப்பட்டன. சொக்கட்டான் ஆடுங்கருவிகளும் விசேஷக்குறிப்புக்குரியவை. ஆரியருடைய இருக்குவேதத்திலும் காட்டியிருக்கின்ற இவ்விளையாட்டு இந்தியாவிலிருந்தே ஐரோப்பாவுக்குச்சென்றது என்பது ஒருதலை. இது சிந்துவெளிச்சனங்கள்காலத்திலேயே ஆரம்பித்திருந்ததுபோலும். அப்பால் சனங்களுடைய பொழுதுபோக்குக்காகக் கோழிச்சண்டை எருத்துச்சண்டைகளும் நடந்தன. இப் பிந்தியது கிரேத்தாதீவினருடைய ஒழுக்கமொன்றை நினைவூட்டுகின்றது. பிற்காலம் ஏறுதழுவல் என்று தமிழருள் நடந்த இது இபேரியா எனும் இஸ்பானியாவில் இன்றைக்கும் காணப்படுகின்றது.

இனி, அழகுக்கலைகளை நோக்கின் சிந்துவெளிமக்கள் கூத்தோடு சங்கீதமும் பயின்றுவந்தனரென்று அறிகின்றோம். நாட்டியப்பெண்களின் உருவங்களைப்பற்றி முன்னரும் சொன்னோம். தாளம் குறிப்பதற்குத் தோற்கருவிகளும் நரம்புக்கருவிகளும் அக்காலத்திலேயே உண்டாகிவிட்டனபோலும். சுட்ட மண்பதுமை ஒன்றிலே தோளிலிருந்து தொங்குகின்ற ஒரு மேளவகையைக் காண்கின்றோம். இரண்டு "முத்திரை"களில் இருமருங்கும் தோல்பூட்டிய மிருதங்கம் மாதிரியான ஒன்று காணப்படுகின்றது. தற்கால வீணையின் முன்னோடியான ஒரு நரம்புக்கருவியின்சாயல் உருவெழுத்துக்களில் விளங்குகிறது என்பர் சில்லோர். ஒரு கைத்தாளமும் கண்டெடுக்கப்பட்டது.

சிற்பத்திலும் கொத்துவேலையிலும் ஓவியத்திலும் சிந்துவெளியாரின் தேர்ச்சி தனிச்சிறப்புடையது. அன்னோரது சிற்பத்திறமை நகரமைப்பின் கண் நன்றாக வெளிப்பட்டுள்ளது. "முத்திரை"களிலே காணும் அவர்கள் சித்திரங்கள் சில மிகத்திறமையாய்ச் செய்யப்பட்டன. ஸர். யோன்மார்ஷல் முன் நாம் குறித்த தமது மூன்றுகாண்டங்களிலும் புறமட்டையில் எடுத்துவரைந்திருக்கின்ற எருத்து உருவம் அன்னோரது சித்திரத்திறமைக்கு ஒரு நல்ல உதாரணம். ஹரப்பாவிலே கண்டெடுத்த சுண்ணக்கல்லுப் பிரதிமை ஒன்று மிகத்திருத்தமாய்ச் செதுக்கப்பட்டது. களிமண்ணிற்பிடித்துச்சுட்டும் மெதுவான கல்லில் வெட்டியும் செய்த மிருக பட்சி யுருக்கள் சில மிக அழகு

வாய்ந்தவை. இவ்வித உருவங்களை மேஸ்திரிமாரல்லாத பலராலும் வெட்டியிருப்பாராதலால் அத்துணைத் திருத்தமில்லாத பதுமைகளும் பல காணப்பட்டன. வெண்கலத்தில் உருக்கிவார்த்த ஒரு எருமையுருவும் நாட்டியப் பெண்பதுமையும் அக்காலத்தாரது சித்திரவன்மைக்கும் அறியப்பட்ட லோகங்களில் வேலைசெய்யும்திறமைக்கும் அத்தாட்சி.

சிந்துவெளியாருடைய மருத்துவம் கணிதம் வானசாத்திரம் என்ற கலைகளைப்பற்றிய சான்றுகள் இதுவரையில் அதிகமாய்க் கிடைக்கவில்லை. கிடைத்த கலைமான்கொம்புகளும் கடல்நுரை எனும் கணவாய் ஓடுகளும் ஒரு வேளை மருந்துக்கு உபயோகமாயினவாகலாம். அங்கே காணப்பட்ட சிலா சத்துவகையும் இன்றுபோல அன்றும் மருந்தாகியிருக்கலாம். அப்படியாயின் ஆயுர்வேதம் எனும் இந்தியமருத்துவமுறை சிந்துவெளியாருக்குள்ளேயே தொடங்கப்பெற்றது எனவேண்டும். கணிதத்தையும் வானசாத்திரத்தையும் பற்றிய குறிப்புக்கள் ஒருவேளை "முத்திரை"களின் மேலெழுத்துக்களை நிச்சயமாய் வாசிக்க வசதியேற்படும்போது அறியப்படலாகும். ஹிறஸ்சுவாமியார் அவற்றை வாசித்த அளவில், சிந்துவெளியார் இராசி மண்டலத்தை அறிந்திருந்தார்களென்றும் அவர்கள் கைக்கொண்ட இராசிகள் பன்னிரண்டு அல்ல எட்டு என்று தோன்றும். எகிப்தியருள் ஆதியில் பன்னிரண்டல்ல, எட்டுமாதங்களுக்குரிய எட்டுத் தெய்வங்களே இருந்தன என எரொடொத்துஸ் எழுதிவைத்தது இங்கு கவனிக்கத்தக்கது. மொஹெஞ்சோதரோவில் சூரியன் ஒவ்வொரு இராசியினுள்ளும் செல்ல ஏழுவீடுதிகள் உண்டானமையிலிருந்து சூரியனோடு ஒற்றுமையாக்கப்பட்ட ஆன்மாக்களுக்கும் ஏழுபிறவி உண்டென்ற கொள்கை எழுந்ததென்றும், இப்பிறவிக் கொள்கை அந்நாளிற் சிந்துவெளியாரிடத்திலிருந்தமைக்கு "முத்திரை" களிற் சான்று உண்டென்றும் ஹிறஸ்சுவாமியார் சொல்லுகின்றார். அது மட்டோ! அவர்கூற்றின்படி மொஹெஞ்சோதரோவில் வானசாத்திர உப்பரிகை போன்ற நிலையம் ஒன்று இருந்ததாகவும் தோன்றும். அப்பட்டணத்தார் சௌரமானமுறையிற் கணித்துவந்ததாகவும், சில அறிஞர் கூறுகின்றார்கள். சிந்துநதிப்பெருக்கு நியதமானகாலங்களில் நடந்துவந்தமையால் அன்னோர் அப்பெருக்குகளைக் கணக்குவைக்கும்பொருட்டு மாதந் திகதிகளைக் கணிக்கவேண்டியவர்களாவதும் இயல்பே. பட்டணத்தின் வீடுகளுக்கு நிலையம் பிரதானதிசைகளை நோக்கிச் சரிவர எடுக்கப்பட்டிருத்தலைக்கொண்டு, அன்னோருள் வானகோளங்களைப்பற்றிய அறிவு ஒருபடித்தாய் இருந்திருக்க வேண்டுமெனவும் அறிஞர் ஊகிப்பர்.

---

ஸ்ரீ

தாரணஹு ஐப்பசிமீ 13உ (29-10-44)

திருவாங்கூர்நாட்டு அமைச்சர்பெருமானுன மேன்மைமிக்க

**சசிவோத்தம ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரவர்கள்**

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு விஜயஞ்செய்தகாலத்து அவர்களுக்கு

**மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் வாசித்துக்கொடுத்த**

# வரவேற்புப்பத்திரம்.

[செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.]

எண்சீராசிரியவிருத்தம்.

திருவும்பல பலநற்கலை தேரும்மதி வலியும்
சேர்வாய்! குல கிரிமேல்ஒளி திகழ்செங்கதி ரானுய்!
மருவும்பல கலையும்தொழில் வகையும்நனி வளர
வருபைம்புய லானுய்! சொலல் வல்லாய்!மிக நல்லாய்!
உருவும்குண நலனும்மிகும் உரனும்ஒளிர் அறனும்
உலகம்புகழ் வினைசெய்கையும் உடையாய்!உயர் நடையாய்!
தருவும்சிறி தெனவேதரு கொடையாய்!தகு தொடையாய்
தருநாவலர் மனமேவிய சசிவோத்தம திலகா!

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மன்னு தமிழும் வடமொழியும் மன்னர் மொழியும் வழக்கியலும்
மாணப் புரக்கும் அரசியலும் வல்லாய்! வருக! வளம்பலசேர்
சென்னை மருவும் அரசாங்கஞ் சிறக்க நிருவாகம்புரிந்த
சீர்சால் சபையின் முதல்வனெனத் திகழ்ந்தோன் வருக! திருவாங்கூர்
மன்னர் மதிக்கும் மதியமைச்சன் வருக! வருக! மலைநாடு
மகிழப் புரந்தந் நாட்டுமக்கள் வளமுற் றின்புற் றிடச்செய்யும்
தென்னன் சசிவோத்தமராம சாமிச் செல்வன் வருகவே!
செய்ய மதுரைத் தமிழ்ச்சங்கஞ் செழிப்புற் றோங்க வருகவே!

நேரிசைவெண்பா.

சசிவோத்தம ராம சாமிவர வெல்லாம்
இசைநல் வரவாக! எங்கும்—இசைபரவ
வாழிதமிழ் நீடூழி வாழிசசிவோத்தமன்சீர்
ஊழிதோ றூழி யுயர்ந்து.

சுபம். சுபம். சுபம்.

ஸ்ரீ:

# மதிப்புரை

[மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தின் இரண்டாவது வெளியீடான நவநீதப்பாட்டியல் மூலமும் உரையும்:— மூலம் இயற்றியவர் நவநீதநடனார். உரையாசிரியர்பெயர்முதலிய ஒன்றும் புலனாகவில்லை. பதிப்பாசிரியர்கள்: டாக்டர் ஐயரவர்கள்குமாரர் திரு. S. கலியாணசுந்தரையரவர்களும், ஐயரவர்கள்மாணவர் திரு, S. G. கணபதி ஐயரவர்களும் ஆவர். விலை ரூ இரண்டு. கிடைக்குமிடம் :— மானேஜர் கலாக்ஷேத்திரம், அடையாறு, சென்னை.]

பாட்டியல் என்பது பிரபந்த இலக்கணம் என்று பொருள்படும். தமிழ்மொழியிற் பிரபந்த இலக்கணங்கூறும் நூல்கள் பல உள. அவற்றுள்ளே சிறந்தவைகளுள் நவநீதப்பாட்டியலும் ஒன்று. இதனை இயற்றியவர் நவநீதநடன் என்னும் புலவராவர். இந்நூல், நவநீதப்பாட்டியல் என்று வழங்கப்படுதலேயன்றி, [வெண்பாப் பாட்டியல் என்பது போன்று] இயற்றப்பெற்ற செய்யுள்வகையால் கலித்துறைப்பாட்டியல் என்றும் வழங்கப்பெறும். இதற்குப் பழைய உரை இரண்டு உண்டு. அவற்றுள் ஒன்று இடையிடையே நுவல்பொருளைத் தக்க மேற்கோள்களால் விரித்து விளக்குவது; பழமை வாய்ந்தது. மற்றொன்று அவ்வாறின்றிச் சுருங்கிய பொழிப்புரையாய் அமைந்தது. இதுகாறும் அச்சிடப்படாத அவ்வுரைகளுடன் கற்பார்க்குப் பயன்படும்படி ஆங்காங்கு நூதனமான குறிப்புரையும் எழுதிச்சேர்த்து இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட பதிப்பாசிரியர்கள்முயற்சி பாராட்டற்குரியது. இப்புத்தகப் பதிப்புக்கு வேண்டிய பொருளுதவிபுரிந்த சென்னை அடையாற்றுக் கலாக்ஷேத்திரத்தின் தலைவர் மேலும் பல தமிழ்நூல்கள் திருந்திய முறையில் வெளிவர உதவிபுரிந்து நீடுவாழ இறைவன் அருள் புரிக.

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனுநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | *திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | | | |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | *நரிவிருத்தம் ... ... ... ... | | | |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... .. ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | *பாண்டியம் ... ... ... ... | | | |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | *வேளிர்வரலாறு ... ... ... | | | |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | | | |
| 35. | *திருமந்திர நூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... .. ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... . ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | *சந்திரகுப்தன் ... ... ... | | | |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 68. | திருமுருகாற்றுப்படை ... ... ... | 0 | 10 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

---

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 41 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கபதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.